**<u>இலங்கை ஆசிரியர் கல்வியாளர் சேவை தரம் III க்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை 2019 (2020)</u>**

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவிற்கு அனுப்பப்பட்டதும் இந்த அமைச்சுக்கும் கிடைத்த 2021.04.25 தினத்தன்று நடத்தப்பட்ட மேற்படி போட்டி பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துக்கும் வழங்கப்பட்ட புள்ளிகளில் குறைநத பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) அல்லது அதற்கு அதிகமாக பெற்று சித்தியடைந்த விண்ணப்பாதாரிகளிடையே வெற்றிட எண்ணிக்கையில் மூன்று மடங்காகும் விண்ணப்பதாரர் பெயர்ப் பட்டியல் இதில் வெளியிடப்படுகின்றது. மேலும் பரீட்சை அறிவிப்பில் காணப்படும் வெற்றிட எண்ணிக்கையின் மூன்று மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கபடுவதாக குறிப்பிடப்பட்டாலும் சில பாடங்களுக்கு இறுதி விண்ணப்பதாரிக்கு சமமான புள்ளிகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் இருக்கும் காரணத்தாலும் மூன்று மடங்குக்கும் அதிகமாகவும் சில பாடங்களுக்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாமை காரணமாகவும் மூன்று மடங்குக்கு குறைவாகவும் இந்த ஆவணத்தில் பெயரகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அது போல ஆங்கில மொழி மூல பாட இலக்கம் 12 – மேற்கத்தைய சங்கீதத்துக்காக தகமை பெற்ற ஒரு விண்ணப்பதாரியும் இல்லை என்பதை மேலும் அறியத்தருகின்றேன்.

02. இந்த பட்டியல் விண்ணப்பதாரர்களின் தகவலுக்காக மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது என்பதோடு இங்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களும் ஆட்சேர்ப்பு அறிவிப்பின்படி தொடர்புடைய பொது நேர்முகப் பரீட்சைக்கு தகுதியுடையவர்கள ஆவர். இந்தப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் பொதுப் நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெற்றிருப்பது மட்டுமே இலங்கை ஆசிரியர் கல்வியாளர் சேவையில் தரம் III நியமனத்தைப் பெறுவதற்கான தகைமையல்ல என்பது வலியுறுத்தப்படுகிறது. இது ஆட்சேர்க்கப்பட்டவர்களின் இறுதிப் பட்டியல் அல்ல என்பதை நினைவில் கொள்ளவும்.

பேராசிரியர் கே கபில சீ.கே. பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு